**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP .No.439/2015**

**நாள் : 07.08.2025**

**எ.ம.சா.** 3 (எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அசோக்ராஜ் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை பெயர் | : | திரு. கிருஷ்ணராஜ் | வயது | : | 25 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | சட்ட அலுவலர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை :**

நான் 4–ம் எதிர்மனுதாரரான இன்சுரன்ஸ் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிகிறேன். அந்த வகையில் மனு பற்றி விவரங்கள் அனைத்தும் எனக்கு பரிட்சியம். இவ்வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்வை மற்றும் உண்மையானவை. அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**2–ம் எதிமனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

01) நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட KA 01 B 2805 என்ற லாரியானது எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி லாரி ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். விபத்து நடந்த 08.01.2015–ம் தேதியில் லாரியின் ஓட்டுநர் எந்தவித இன்டிகேட்டர் போடாமல் பாலையம் புதூர் ராஜ போகம் ஓட்டல் எதிரே தேசிய நெடுஞ்சாலையில் விட்டுவிட்டு சென்றுள்ளார் என்றால் சரியல்ல. நெடுஞ்சாலையின் ஓரமாக தான் நிறுத்தியுள்ளார். எங்களது நிறுவனத்தின் தரப்பில் தொப்பூர் காவல் உதவி ஆய்வாளர் எ.ம.சா.2–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எ.ம.சா.த.ஆ.2 மாதிரி வரைப்படத்தில் தருமபுரி – சேலம் தேசிய நெடுஞ்சாலையின் நடுவே சம்பவ இடம்

காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாலையின் இடது ஓரத்தில் சம்பவ இடம் காட்டப்பட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். சாலையின் நடுபுறத்தில் லாரியை விட்டுச் சொன்றாதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறாக சாலையின் நடுவே நிறுத்தப்பட்டிருந்ததால் பின்னால் வந்த மனுதாரர் தரப்பு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தின் காரணமாக மனுதாரரின் உடல் நிலை கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு லாரி ஓட்டுநர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தூவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரரை பொறுத்தம்மட்டில் 4-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு 3-ம் தரப்பினர் என்றால் சரிதான். அந்த வகையில் மனுதாரருக்கு எங்களது நிறுவனமானது காப்பீட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. எனவே 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனமானது இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.